**செய்தி வெளியீடு எண்: 827** **நாள்: 23.11.2019**

**செய்தி வெளியீடு**

கவிஞர் சுரதா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, அசோக் பில்லர், மாநகராட்சி பூங்கா அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச்சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று(23.11.2019) மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்த நாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், கவிஞர் சுரதா அவர்களின் பிறந்த தினமான நவம்பர் 23ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அதன்படி, கவிஞர் சுரதா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, அசோக் பில்லர், மாநகராட்சி பூங்கா அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று (23.11.2019) மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பா. பெஞ்சமின் அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகத் தலைவர் திருமதி. பா. வளர்மதி அவர்கள், அரசு உயர் அலுவலர்கள், கவிஞர் சுரதா அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**